# சங்க இலக்கியத்தில் இடம் பெறும் வேளாண் நிலங்கள்

# Agricultural lands in sangam literature

கு.ஜெயபிரபா,

*முனைவர் பட்ட (பகுதி நேர) ஆய்வாளர்,*
*மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்,*
*மதுரை.*

Orcid number : 0000-0003-2674-1627

Guide Name : P.Ramanathan, Associate Professer,

Sri S.Ramasamy Nadiu Memorial College, Sattur.

Orcid number : 0000-0003-3200-5722

***Abstract :***

*The plant earth we live on is a part of the sun that has split apart. Another name for the earth is 'water sphere'. It was not until many centuries later that the heat subsided and the earth became fertile. Land is a basic resource that meets the daily needs of humans and animals. The human race plows and cultivates the land and receives its daily basic food.*

**Keywords:** *land discrimination, lands used for agriculture, lands not used for agriculture.*

## முன்னுரை :

நாம் வாழும் பூமி என்ற கிரகமானது சூரியனிடமிருந்து பிரிந்து வந்த ஒரு பகுதியாகும். பூமியின் மற்றொரு பெயர் 'நீர்க்கோளம்' என்பதாகும். இது பல நூற்றாண்டுகளுக்குப் பின்புதான் வெப்பம் தணிந்து மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற நிலப்பரப்பைக் கொண்ட பூமியாக மாறியது. நிலமென்பது மனிதர்கள் மற்றும் விலங்கினங்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஓர் அடிப்படையான ஆதார வளமாகும். நிலத்தை உழுது விவசாயம் செய்து தனது அன்றாட அடிப்படைத் தேவையான உணவை மனித இனம் பெற்றுக் கொள்கிறது. சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படும் வேளாண் நிலங்களை **மட்டும் இக்கட்டுரையின் ஆய்வுப்பொருளாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.**

**தொல்காப்பியம் சுட்டும் ஐந்திணை** :

தொல்காப்பியர் எழுத்து, சொல் முதலியவற்றின் இலக்கணங்களை விவரிக்கின்றார். அக்காலத் தமிழர் தம் வாழ்வியலை இலக்கியப் பாடுபொருளுக்கு அடிக்கருத்தாக்குகின்றனர். மனித வாழ்க்கையின் நிலைகளை அடிப்படையாகக் கொண்டு நிலம் இயங்குவதை,

"கைக்கிளை முதலா பெருந்திணை இறுவாய்

முற்படக் கிளர்ந்த எழுதிணை என்ப"

(தொல்காப்பியம், நூ-1)

எனவும்,

"அவற்றுள்

நடுவண் ஐந்திணை நடுவனது ஒழிய

படுதிரை வையம் பாத்திய பண்பே"

(தொல்காப்பியம், நூ-2)

எனும் நூற்பாவின் வழி புலனாகிறது. இந்த ஐந்திணைகளே தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாட்டுக்கு அடிப்படையாக அமைகின்றது.

ஐந்நிலப் பாகுபாடு :

இலக்கியப் பாடுபொருள்களைப் பற்றி தொல்காப்பியப் பொருளதிகாரம் விளக்குகிறது. ஏற்கனவே பயின்று வரும் பொருட்களின் அடிப்படையில் திணைகளை விளக்கும் போது அவற்றை முதல், உரி, கருப்பொருள் என மூன்று பொருளில் தொல்காப்பியர் விளக்குகிறார். முதற்பொழுது என்பது நிலம், பொழுது என்ற இரண்டின் அடிப்படையில் ஆனது இதனை,

"முதல் எனப்படுது நிலம் பொழுது இரண்டின்

இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரோ"

(தொல்காப்பியம், நூ-4)

எனும் நூற்பா முதற்பொருள் பற்றி விளக்குகிறது.

சுவரின்றிச் சித்திரம் எழுதுதல் இல்லை, அரங்கமின்றி வட்டாடுதலும் இல்லை, ஒவியம் வரைபவர்க்கு கிழியே நிலைக்களமாய் அமைவது போன்று உழவுத் தொழிலுக்கும் நிலமே களமாகும்.

"மயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

(தொல்காப்பியம், நூ-5)

எனும் நூற்பாவின் வழி தொல்காப்பியர் கடவுளை முன்னிறுத்தி நிலத்தை அடையாளம் காட்டுவதை அறிந்து கொள்ள முடிகிறது.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் கூறும் இந்நால்வகை நிலத்துடன் நிலமற்ற பாலையையும் நிலமாகத் தொல்காப்பியர் கூறுகிறார் இதனை,

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே"

(தொல்காப்பியம், நூ-11)

எனும் நூற்பாவின் வழி பாலை நிலத்தை நடுவுநிலைத்திணை என்று குறிப்பிடுவதை அறிய முடிகிறது. மேலும், பாலைக்கும் நிலமுண்டு எனக் கூறும் கருத்துரை சங்க காலத்திலேயே இருந்துள்ளது. தொல்காப்பியர் பாலைக்கு தனிநிலப் பகுப்பு செய்யவில்லை என்றாலும், சங்க காலத்திலேயே அவர் வகுத்த மரபு மாற்றம் பெற்றது.

**திருவள்ளுவர் கூறும் நிலப்பாகுபாடு :**

**ஐவகை நிலத்தைப் பகுத்துரைக்கும் மரபை சங்கச் சான்றோரை அடியோற்றித் திருவள்ளுவர் கூறுகிறார். நால்வகை நிலப் பெயர்களைக் கூறாமல் பாலை நிலத்தை மட்டும் கூறுவதை,**

**"அன்பகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**

**வற்றல் மரம்தளிர்த் தற்று"**

**(திருக்குறள் - 78)**

**எனும் குறளின் வழி பாலை நிலத்தில் வாடிய மரம் வளராது என்பது புலனாகிறது.**

**நிலப்பெயர்கள்** :

நிலம் என்பது அனைத்து வகை நிலப்பகுதியை குறிக்க்கூடிய பொதுச்சொல்லாகும். மாநிலம், நிலவரை என முன்னும், பின்னும் ஒட்டுச் சேர்த்து இப்பெயர் வழங்கப்படுகிறது. ஞாலம், உலகம், வையம், உலகு என்பனவும் நிலம் என்பதைக் குறித்து வழங்கிய பிற சொற்கள் ஆகும். நிலத்தைப் பயிர் விளைவிக்கும் இயற்கை நிலைக்கு ஏற்ப பண்டைய மக்கள் பாகுபடுத்தியுள்ளது சிறப்பாகும்.

**நன்னிலம்** :

நன்செய் நிலம், புன்செய் நிலம் எனும் நிலப்பாகுபாடு தமிழக விவசாயத்தில் காலங்காலமாக இருந்து வருகிறது. நன்செய் நிலம் என்பது நன்மை செய்யும் நிலம் எனப் பிரித்து பொருள் கொள்ளப்படுகிறது. நல்ல நீர் மற்றும் மண் வளமிக்க நிலம் நன்னிலம் ஆகும். பொதுவாக நன்னிலம் ஆற்றுப்படுகைகள், குளம், ஏரிக்கரைகள் முதலியவற்றின் அருகே காணப்படுகிறது. நல்ல செழிப்பான பயிர் விளைச்சலைத் தரும் வளம் மிக்க நிலங்களைக் கொண்டது நன்னிலம். ஆற்றில் மேட்டுப் பகுதியில் இருந்து அடித்து வரப்பட்ட வண்டல்கள் படிந்து பூமியை வளமாக்குகிறது.

இன்ன நிலத்தில் இருந்து இன்ன பயிர் முளைக்கிறது என்பதை அப்பயிரின் முளையின் வழி அறிய முடிகிறது. அதுபோல குடியின் பிறந்தவரின் வாய்ச்சொல் அவருடைய குடிப்பிறப்பைக் காட்டும் என்பதை,

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்

குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்"

(திருக்குறள்-959)

எனும் குறளின் வழி விளையும் பயிர் முளையில் தெரிவதை அறிந்து கொள்ள முடிகிறது.

**வன்புலம்** :

**உடையத்தக்க சிறுசிறு துகள் கற்களையும், மண் வளமும், நீர் வளமும் குறைந்த பகுதி வன்புலம் ஆகும்.**

"வன்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரும்"

(புறநானூறு, பா.எ.42:17)

"அம்புசேண் படுத்து வன்புலத்து உய்த்தெனத்"

(அகநானூறு,

பா.எ.309:3)

"வன்புலம் இறந்த பின்றை மென்தோல்"

(பெரும்பாணாற்றுப்படை,206)

எனும் பாடலடிகளின் வழி வன்புலம் என்பது குறிஞ்சியையும், முல்லையையும் குறிப்பதை அறிய முடிகிறது.

**மென்புலம்** :

மண் வளமும், நீர் வளமும் நிறைந்த பகுதியை மென்புலம் என்று அழைப்பர். மருதமும், நெய்தலும் மென்புலத்தில் அடங்கும்.

"மென்புலம் வைப்பின் நன்னாட்டு பொருந"

(புறநானூறு, பா.எ.42:18)

"மென்புலக் கொண்கன் வாராதோனே!"

(ஐங்குறுநூறு, பா.எ.119:4)

எனும் பாடலடிகளின் வழி மென்புலம் என்பது மென்மையான மருத நிலத்தைக் குறிப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

புன்புலம் :

புன்செய் நிலம் பொதுவாக புன்மை செய்யும் நிலம் ஆகும். புன்செய் நிலம் என்பது வானம் பார்த்த நிலமாகும். பெரும்பாலும் நீருக்கு மழையையே நம்பி உள்ளது. புன்செய் நிலம் பெரும்பாலும் மேட்டுப்பகுதிகளில் ஆற்று நீர் பிடிப்பு பகுதிகளில் அதிகமாக காணப்படுகிறது. கடுமையான மண் அரிப்பின் காரணமாக புன்புலம் மண் வளமிழந்து காணப்படுகிறது. புன்செய் நிலத்தில் விதைகளை விதைத்து விட்டு நீருக்கு மழையை நம்பி உள்ளதை,

"வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்"

(புறநானூறு, பா.எ.18:24)

எனும் பாடலடியின் வழி புன்செய் நிலம் வறண்ட நிலமாக காட்சியளிப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**படப்பை** :

படப்பை என்பது மனைபுறத்தோட்டம். கால்நடைகளுக்குரிய உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்கும் இடமாகும். மக்கள் தங்கள் உணவுக்கு வேண்டிய காய்கறிகளைப் படைத்துக்கொள்வதற்கும், மனைபுறத்தில் அமைந்துள்ள தோட்டப்பகுதி படப்பை எனப்படும் இதனை,

"மஞ்சள் முன்றில் மணநாறு படப்பைத்"

(பெரும்பாணாற்றுப்படை,354)

"அகல்வயற் படப்பை அவனூர் வினவிச்"

(நற்றிணை, பா.எ.365:40)

போன்ற பாடல்களின் வழி படப்பை எனும் சொல் தோட்டப்பகுதியைக் குறிப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**விடுநிலம்** :

கால்நடைகளின் மேய்ச்சலுக்கென ஊர் மக்களால் பொதுவாக விடப்பட்ட நிலம் விடுநிலம் எனப்படும்.

"களிறுநீ றாடிய விடுநில மருங்கின்"

(புறநானூறு, பா.எ.325:1)

“விடுநிலக் கரம்பை விடரளை நிறையக்”

(பதிற்றுப்பத்து, பா.எ.28:7)

எனும் பாடலடிகளின் வழி ஆநிரைகளை மேய்ச்சலுக்கு விடப்பெற்ற ஊர்ப் பொதுநிலம் விடுநிலம் என அழைப்பது புலனாகிறது.

**பயன்படாத நிலங்கள்** :

விளைச்சலுக்கு ஏற்ற நிலங்களைப் பகுத்தறிந்து பெயரிட்டது போலவே பயன்படாத நிலப் பகுதிகளையும் முரம்பு, கரம்பை, உவர்நிலம், களர்நிலம் எனப் பிரித்தறிந்து பெயரிட்டிருந்தனர். பண்டைய மக்கள் சங்க இலக்கியத்திலும் இவ்வரையறை தெளிவாகக் கூறப்படுகிறது.

**முரம்பு** :

முல்லை நிலத்தில் காணப்படும் மண் வகைகளில் முரம்பும் ஒன்றாகும். இதனைப் பரல் கற்கள் நிறைந்த நிலம் என்று கூறுவதை,

“வான்பளிங்கு விரைஇய செம்பரல் முரம்பின்”

(பதிற்றுப்பத்து, பா.எ.66:8)

“முரம்புகண் உடைந்த பரலவற் போழ்வில்”

(மலைபடுபடாம், 198)

எனும் பாடலடிகளின் வழி **முரம்பு என்பது மேட்டு நிலப்பகுதி என்பது புலனாகிறது.**

**கரம்பை** :

நீர் இன்றி வேளாண்மைக்குப் பயன்படாது விடப்பட்ட நிலம் கரம்பை என அழைக்கப்பட்டது இதனை,

“இருநிலக் கரம்பை படுநீ றாடி”

(பெரும்பாணாற்றுப்படை,93)

"விடுநிலக் கரம்பை விடரளை நிறையக்"

(பதிற்றுப்பத்து, பா.எ.28:7)

எனும் பாடலடிகளின் வழி கரம்பை என்பது பயிர்கள் விளையாத தரிசு நிலம் என்பதை அறிய முடிகிறது.

**உவர் நிலம்** :

உப்புத்தன்மை உள்ள நிலம் உவர் நிலமாகும். அவ்வுப்புத்தன்மை அதிகமாக இருந்தால் அந்நிலம் களர் நிலம் என்று அழைக்கப்படுகிறது. தயிர்கடையும் போது திரளாது சிதறிக் கிடக்கும் வெண்ணெய் போல உப்புத்தன்மை அதிகம் உள்ள நிலம் களர் நிலம் எனப்படுவதை,

"சுடுமண் தசும்பின் மத்தம் தின்ற
பிறவா வெண்ணெய் உருப்புஇடம் தன்ன
உவர்எழு களரி ஓமைஅம் காட்டு"

(நற்றிணை, பா.எ.84:6-8)

எனும் பாடலடியின் வழி களர் நிலம், உவர் நிலம் போன்ற நிலங்கள் உப்புத்தன்மை அதிகம் கொண்டவை என்பது புலனாகிறது.

**பழனம்** :

பழனம் எனும் சொல் வயல் என்ற பொருளைக் குறிப்பதை,

"பழன மஞ்ஞை உகுத்த பீலி"

(புறநானூறு, பா.எ.13:10)

"பழன வாளை கதூஉம் ஊரன்"

(குறுந்தொகை, பா.எ.8:2)

எனும் பாடலடிகளின் வழி பழனம் என்பது வயலைக் குறிப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**புலம்** :

புலம் எனும் சொல் நிலம் எனும் பொருளைக் குறிப்பதை

"புலம்பெயர் மக்கள் கலந்தினி துறையும்"

(பட்டினப்பாலை,12)

"வேண்டுபுலங் கவர்ந்த ஈண்டுபெருந் தாளையொடு"

((முல்லைப்பாட்டு,90)

எனும் பாடலடிகளின் வழி புலம் என்பது நிலத்தைக் குறிப்பதை அறிய முடிகிறது.

முடிவுரை :

தொல்காப்பியம் நிலத்தைத் திணை அடிப்படையில் பாகுபடுத்துகிறது. நிலம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பிரிக்கப்படுகிறது. நன்னிலம் என்பது நல்ல நீர் வளமிக்க நிலப்பகுதியாகும். மென்புலம் என்பது மருத நிலத்தைக் குறிக்கிறது. புன்புலம் வறண்ட நிலமாக உள்ளது. படப்பை என்பது தோட்டப்பகுதியைக் குறிக்கிறது. முரம்பு, கரம்பை, உவர் நிலம், பழனம், புலம் போன்ற நிலங்கள் வேளாண்மை செய்ய இயலாத தரிசு நிலங்களாகும். முரம்பு என்பது மேட்டு நிலப்பகுதியையும், உவர் நிலம் என்பது அதிகமான உப்புத்தன்மைக் கொண்ட நிலத்தைக் குறிப்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

துணைநூற் பட்டியல்:

[1] இளம்பூரணனர் (உ.ஆ), தொல்காப்பியம், பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை-600014, முதற் பதிப்பு.2005.

[2] டாக்டர்.கதிர்.முருகு (உ.ஆ), பட்டினப்பாலை, நெடுநல்வடை, சாரதா பதிப்பகம், சென்னை-14, முதற் பதிப்பு.2009.

[3] டாக்டர்.கதிர்.முருகு (உ.ஆ), மலைபடுகடாம், சாரதா பதிப்பகம், சென்னை-14, முதற் பதிப்பு.2009.

[4] டாக்டர்.கதிர்.முருகு (உ.ஆ), குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, சாரதா பதிப்பகம், சென்னை-14, முதற் பதிப்பு.2009.

[5] புலியூர்க்கேசிகன் (உ.ஆ), நற்றிணை (முதற் பகுதி), பாரி நிலையம், 90, பிராட்வே சாலை, சென்னை-600018, முதற் பதிப்பு.1967.

[6] புலியூர்க்கேசிகன் (உ.ஆ), நற்றிணை (இரண்டாம் பகுதி), பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600001, முதற் பதிப்பு.1980.

[7] புலியூர்க்கேசிகன் (உ.ஆ), குறுந்தொகை, கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை-600017, முதற் பதிப்பு.2010.

[8] புலியூர்க்கேசிகன் (உ.ஆ), ஐங்குறுநூறு ((முதற் பகுதி), பாரி நிலைம், 184/88, பிராட்வே, சென்னை-108, முதற் பதிப்பு.2008.

[9] புலியூர்க்கேசிகன் (உ.ஆ), பதிற்றுப்பத்து, பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை-600108, முதற் பதிப்பு.1974.

[10] புலியூர்க்கேசிகன் (உ.ஆ), அகநானூறு, மணிமிடைப் பவளம், பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை-600108, முதற் பதிப்பு.1960. சென்னை-600108, முதற் பதிப்பு.1962.

[11] புலியூர்க்கேசிகன் (உ.ஆ), புறநானூறு, கங்கை புத்தக நிலையம், தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை-60017, முதற் பதிப்பு.2010.

[12] வரதராசனர்.மு, (உ.ஆ), திருக்குறள், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 522, டி.டி.கே சாலை, சென்னை-600018, முதற் பதிப்பு.2009.

[13] வித்துவான்.M.நாராயணவேலுப்பிள்ளை (உ.ஆ), பத்துப்பாட்டு பகுதி-1 முல்லை நிலையம், 9, பாரதி நகர், முதல் தெரு, தி.நகர், சென்னை-600017முதற் பதிப்பு.1994.